முருகப்பெருமான் துணை

**மகான் கடைப்பிள்ளை சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.07.2021, வியாழக்கிழமை

1. கலிநாதனே அஞ்சும்படியான நல்
   கருணை பெருக்கி அருளும்
   அழியாமை பெற்ற ஞானியே
   ஆறுமுகனே அரங்கனே உன்பலம் மெச்சி
2. மெச்சியே துல்லிய ஆசியை
   மேலான பிலவ நள்ளி திங்கள்
   அச்சமிலா சஷ்டி திகதி குருவாரம்
   (பிலவ வருடம் ஆடி மாதம் 6ம் நாள், 22.07.2021 வியாழக்கிழமை)
   அருளுவேன் கடைப்பிள்ளை சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான காப்பு சக்தியாக
   ஞான பண்டிதன் வழிபாட்டை
   ஞானமாக மக்களுக்கு அருளிவர
4. வருகின்ற இந்த மெய்ஞானவழி
   வையகம் எங்கும் வலம் வந்து
   தரும பலம் தன்னை வளர்க்க
   தனித்துவம் உலகமெல்லாம் கூடி
5. கூடியே மக்களிடை மாற்றம்
   குருபலமாக அனுகி வந்து
   நாடெங்கிலும் அமைதி கூடி
   நற்செயலாக ஆளுமை தானும்
6. தானுமே மக்களை காக்கும் சக்தியாக
   தவராசன் அருளாசி நிறைந்த
   ஞான ஆட்சியாக மாறும்
   நம்பிக்கை தரும் சக்தியான
7. சக்தியான அரங்கமகானை
   சரணடைந்து மக்கள் வர
   பக்தி சித்தி நிறைந்த நல்
   பரிபக்குவ நிலைகள் பெருகி
8. பெருகியே அரங்கன் தேடலின்
   பேருலகம் காக்கும் ஞானிகளாகி
   வருமுலகில் தருமவான் ஞானவான்கள்
   வரிசைபட ஞானிகள் ஆகி

9. ஆகியே கலியின் துன்பங்களை
அகற்றும் சக்தி மிக்கவர்களாகி
அகிலத்தில் பாதுகாப்பு மிகுந்த
அமைதிநிறைந்த சூழல் உருவாக்கி

10. உருவாக்கியே எல்லா மக்களும்
உயிர் பாதுகாப்பு பெறும்படி
தருமம் நிறைந்த ஆட்சி தந்து
தரணியில் ஞானயுகமாற்றமெனும்

11. மாற்றம் தந்து சிறப்பர்
மனிதர்களுள் மகான்களாக பலர்
மாற்றம் கண்டும் திளைப்பர்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—